# இண்டு வார்த்தை

இந்த உலகத்தில் வாழுகின்ற மனிதர்கள் சிலர் அறிவாற்றல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். வேறு சிலர் பாமரத்தனம் கொண்டவர்களாக உள்ளார்கள். மற்றும் சிலர் செல்வச் செழிப்புள்ளவர்களாகத் திகழ்கிறார்கள். வேறுசிலர் வறுமையின் பிடியில் சிக்கி உழல்கிறவர்களாக இருக்கிறார்கள். சிலர் பண்டிதர்களாக விளங்குகிறார்கள். பலர் படிப்பறிவு இல்லாதவர்களாக வாழ்நாளைக் கழிக்கிறார்கள் இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கு என்ன காரணம் என்பது பலருடைய கேள்வி. இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கிற விதத்தில் புராணங்கள் கூறும் புண்ணியக் கதைகள் என்னும் தலைப்பில் இந்நூல் மலர்ந்துள்ளது.

வங்கியில் சேமிப்பு இருக்கிற வரையில் ஒருவர் எந்த வித சிரமமுமின்றி வாழ்க்கையினை நடத்திச் செல்ல முடிகிறது. வங்கிக்கணக்கு தீர்ந்து விட்டால் இந்த உலகிலுள்ள எல்லாத் துன்பங்களையும் அவர் எதிர் நோக்கியாக வேண்டும். அதே போல் நம்முடைய புண்ணியக் கணக்கு நிறைந்திருக்கும் போது இந்த உலகில் எல்லாச் சிறப்புகளையும் பெற்று நாம் விளங்குகிறோம். புண்ணியக் கணக்கு குறைவாக இருப்பவர்கள் சிறப்புகளைப் பெற முடியாவிட்டாலும் சாதாரண வாழ்க்கையினைப் பெறுகிறார்கள். புண்ணியக் கணக்கு தீர்ந்து போனவர்கள் அளவில்லாத துயரங்களை இந்த கர்ம பூமியில் அனுபவிக்க நேரிடுகிறது. ஆகவே நாம் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமானால் நம்முடைய புண்ணியக் கணக்கை



உயர்த்திக் கொண்டே இருக்கவேண்டும். புண்ணியம் என்பது நம்மைத் தீயசெயல்களிலிருந்து விடுவித்துக் கொண்டு நல்ல செயல்களையே எப்போதும் செல்வது தான். ஒரு அறை பல ஆண்டுகளாக இருள் மயமாகவே உள்ளது. அந்த அறையில் ஒரு சுடற்விளக்கை ஏற்றும் போது என்ன ஆகிறது? ஒரு நொடியில் இருள் விலகி ஓடுகிறது. அந்த அறையை ஒளி சூழ்கிறது. பல ஆண்டுகளாக நான் இங்கே வாசம் செய்து கொண்டிருக்கிறேன். நான் போக முடியாது என்று இருள் சொல்வதில்லை. ஒளி வந்தவுடன் இருள் விலகியே ஆகவேண்டும். அதே போல் நாம் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களாக இருந்த போதிலும் கூட நல்வினைகள் என்று சொல்லக் கூடிய ஒளி தீபத்தை ஏந்துவோமேயானால் நம்முடைய துன்பங்கள் அனைத்தும் விலகி ஓடிவிடும். ஆகவே புண்ணிய காரியங்கள் நாம் முயன்று செய்ய வேண்டும். அதற்கு வழி காட்டுகிற விதத்தில் ‘புராணங்கள் கூறும் புண்ணியக் கதைகள்’ என்னும் இந்நூல் விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் இதனைத் தந்திருக்கிறேன்.

புராணங்கள் என்பவை இறைவனின் பெருமைகளையும், ஆற்றல்களையும் எடுத்துக் கூறுவதோடு இன்றைய உலகில் நாம் வாழ்வதற்கான வழிகளைக் காட்டக் கூடிய சிறந்த வழிகாட்டியாகவும் உள்ளன. ஆகவே இக்கதைகளின் முடிவில் தற்கால மக்களுக்குப் பயன்படுகிற விதத்தில் அதற்கான நீதி மொழிகளையும் இணைத்திருக்கிறேன். எனதருமைத் தந்தையாகவும், ஞான குருவாகவும், வழிகாட்டியாகவும் விளங்கிவருகிற அருள்மிகு புவனேஸ்வரி சுவாமிகளின் எண்ணங்கள் இத்தகைய நீதி நூல்கள் வாயிலாக நிறைவேறி வருவது

குறித்து நான் மகிழ்ச்சியினை அடைந்துள்ளேன் அவருடைய எண்ணங்களைச் செயல்முறைக்குக் கொண்டு வருவதை நான் இலட்சியமாகக் கொண்டுள்ளேன். அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றியே தீரவேண்டும் என்ற வைராக்கியமும் உள்ளது. அன்னை புவனேஸ்வரியின் திருக் கருணையினாலும் என் ஞான குருவின் அருளாசியாலும் அவற்றை செயலாக்குவதே என் முதல் பணியாகும்.

நம்முடைய செயல்களே நம் முன்னேற்றத்திற்கும் தாழ்வுக்கும் அடிப்படைக் காரணங்களாக உள்ளன. இதனைத் தெரியப்படுத்துவதற்காகவே புராணங்கள் திரும்ப, திரும்ப பல்வேறு கதைகளை நமக்குக் கூறிய வண்ணம் உள்ளன. அப் புராணக் கதைகள் ஏதோ ஆன்மிகவாதிகளுக்கு மட்டும் சொந்தமானவை, நமக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று நாம் கருதக்கூடாது. படித்தவர், பாமரர், ஏழை, பணக்காரன், மேதை, பேதை, சிறியவர், பெரியவர் என அனைத்துத் தரப்பினரும் புராணக்கதைகளைப் படிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். தங்களின் புண்ணியக் கணக்குகளை உயர்த்திக் கொள்ள வேண்டும். இந்த மண்ணுலகில் வாழ்வாங்கு வாழ வேண்டும். இந்த லட்சியத்தின் அடிப்படையில் தான் இந்நூல் உதயமாகியுள்ளது.

'பரம' பொருளின் ஆற்றல் கதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. ஆணவம் அழிக்கப்பட்ட வரலாறுகள் இதில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த உலகில் நாம் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது என்ற விவரங்களெல்லாம் தகுந்த சான்றுகளுடன் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மொத்தத்தில் புண்ணியம் என்கிற வங்கிக்



கணக்கை உயர்த்திக் கொள்வதற்குச் சிறந்த வழிகாட்டி நூலாக இது திகழுகிறது. இது மட்டுமின்றி ஆன்மிகத்தில் புதைந்திருக்கும் கருத்துக் கருவூலங்களை எல்லோரும் பயனடையும் விதத்தில் எளிய நடையில் கதைகளாகவும், நீதி நெறி வடிவங்களாகவும் செய்து அனைவருக்கும் வழங்கவேண்டும் என்ற திட்டங்களும் உள்ளன. எல்லாம் இறைவன் திருவருளாலும் குருவருளாலும் நிறைவேறும். எல்லோரும் நீங்காத செல்வம் நிறைந்து வாழ வேண்டுமாய் எம்பெருமானார் ஸ்ரீபரமஹம்ச புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திருவடிகளை சிந்திக்கிறேன்.

ஸ்வாமிகள் திருவடியில்
ஸ்வாமி பரத்வாஜர்